செய்தி வெளியீடு எண்: 951 நாள்: 26.12.2018

# செய்தி வெளியீடு

## "சுற்றுச்சூழலை மேம்படுத்த விழாக்கள் மற்றும் சுப நிகழ்ச்சிகளில் தோட்டக்கலை செடிகள் விநியோகம்"

மரங்கள் சுற்றுச்சூழலை பசுமையாக்குவதுடன் தூய்மைப்படுத்துகின்றன. மேலும் இவை மனிதர்கள், பறவைகள் மற்றம் விலங்குகளுக்கு தேவையான பழங்கள்/ எரிபொருள்/ மருத்துவ மூலப்பொருட்கள் முதலியவற்றை வழங்குவதுடன் பறவைகளுக்கு வசிப்பிடமாகவும் திகழ்கிறது. மரங்கள் சுற்றுச்சூழலிலுள்ள கார்பன் டை ஆக்ஸைடு மற்றும் பிற தீங்கு விளைவிக்கும் வாயுக்களின் அளவை கணிசமாக குறைப்பதுடன் மனிதர்களுக்கும், இதர உயிர்களுக்கு தேவையான ஆக்சிஜனை விடுவிக்கின்றன. மரங்கள் நடவு செய்வதால் ஒரு மரமானது தனது ஆயுட்காலத்தில் சுமார் 1 முதல் 1.6 ஜிகா டன் அளவு கார்பன் டை ஆக்ஸைடை உட்கிரகித்து உயிரினங்களுக்கு பயன்படும் ஆக்சிஜனை தருகின்றன.

சமீப காலமாக விழாக்கள், பண்டிகைகள் மற்றும் திருமண நிகழ்ச்சிகளின் போது அத்தின சிறப்பை நினைவு கூறும் வகையில் விழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகளுக்கு வருகை தரும் விருந்தினர்களுக்கு மரக்கன்றுகள்/பழக்கன்றுகள் வழங்குவது பிரபலமடைந்து வருகிறது. தமிழ்நாட்டில் விழாக்கள், பண்டிகைகள், திருமணம் மற்றும் இதர நிகழ்ச்சிகள் அதிக அளவில் கொண்டாடப்படுகின்றன. இந்நிலையில் விழாக்களுக்கு வரும் விருந்தினர்களுக்கு மரக்கன்றுகள் தரும் பண்பாட்டை ஊக்குவிக்கும் விதமாக நடப்பாண்டில், தமிழ்நாடு தோட்டக்கலை துறை விழாக்கள், பண்டிகைகள் மற்றும் திருமண நிகழ்ச்சிகளுக்கு தோட்டக்கலை சார்ந்த நடவுச்செடிகள்/பழச்செடிகளை தரமானதாகவும், குறைந்த விலையிலும் வழங்கி வருகிறது.

தமிழ்நாடு தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் கீழ் தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையின் கட்டுப்பாட்டில்(டான்ஹோடா) 61 அரசு தோட்டக்கலை பண்ணைகளும் 19 பூங்காக்களும் செயல்பட்டு வருகின்றன. கடந்த 2017-18ம் நிதியாண்டில் மட்டும் சுமார் 9.26கோடி தரமான தோட்டக்கலை கன்றுகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

ஆண்டுதோறும் சுமார் 5 இலட்சம் தோட்டக்கலை நடவுச்செடிகள்/பழச்செடிகள் அரசு தோட்டக்கலை பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. நெல்லி, சப்போட்டா, மாதுளை, புளி, எலுமிச்சை, நாவல் மற்றும் விளாம்பழம் போன்ற நமது பாரம்பரிய பழக்கன்றுகளும், கருவேப்பிலை, கொடுக்காப்புளி, முந்திரி, வேம்பு, மரவேம்பு, புங்கம், தேக்கு மற்றும் சவுக்கு போன்ற மரங்களும், மல்லிகை, வெட்சி மற்றும் அரளி போன்ற பூச்செடிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இது போன்ற நடவுச்செடிகள் தவிர பல்வேறு பழக்கன்றுகள் மற்றும் இதர தோட்டக்கலை பயிர்களின் நடவுச்செடிகள் விருப்பத்தின் அடிப்படையில் உற்பத்தி செய்தும் வழங்கப்படும்.

அரசு தோட்டக்கலை பண்ணைகளில் அழகுச்செடிகள் ரூ.5 முதல் ரூ. 10 வரையிலும் , வேம்பு, புங்கம் போன்ற மரச்செடிகள் ரூ.10 முதல் ரூ.20 வரையிலும், பழச்செடிகள் ரூ.8 முதல் ரூ.60 வரையிலும், மலர்ச்செடிகள் ரூ.8 முதல் ரூ. 30 வரையிலும் விற்கப்படுகிறது.

எனவே, வாடிக்கையாளர்கள் தங்களது வட்டார அளவில் செயல்படும் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தையோ அல்லது மாவட்ட அளவிலான தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகத்தையோ அணுகி இத்திட்டத்தின் கீழ் பயனடைய முன்பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இது தவிர உழவன் கைபேசி செயலி மற்றும்

வாட்ஸ்அப் செயலி வாயிலாகவும் முன்பதிவு செய்துகொள்ளலாம். இத்திட்டம் தொடர்பான கூடுதல் தகவல்களை கீழ்கண்ட முகவரிகளில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

இணையதளம் : http://tnhorticulture.tn.gov.in/horti/

முகநூல் : Thottakalai

டிவிட்டர் :THOTTAKALAI

வாட்ஸ்அப் எண்: 9894071746

**தொலைபேசி தொடர்புக்கு**

தோட்டக்கலை இயக்குநர்அலுவலகம் சென்னை – 044–28524643

தோட்டக்கலை துணை இயக்குநர், சென்னை – 044 – 25554443

தோட்டக்கலை துணை இயக்குநர், காஞ்சிபுரம் – 044 – 27222545

தோட்டக்கலை துணை இயக்குநர், கோவை – 0422– 2453578 , 0422– 2455799

தோட்டக்கலை துணை இயக்குநர், திண்டுக்கல் – 0451 – 2460322, 0451 – 2460522

தோட்டக்கலை துணை இயக்குநர், கிருஷ்ணகிரி – 04343 – 231130

தோட்டக்கலை துணை இயக்குநர், மதுரை – 0452 – 2532351

தோட்டக்கலை துணை இயக்குநர், சேலம் – 0427 – 2451382

தோட்டக்கலை துணை இயக்குநர், திருநெல்வேலி – 0462 – 2581632

தோட்டக்கலை துணை இயக்குநர், திருச்சி – 0431 – 2423464

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**